தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 12 ஏப்ரல் 2012 கனி 5

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted at Batlagundu Post office on 10 th Apr. 2011

To

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே
எபிரெயர் 13:5

*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA



BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

*Our Radio & TV*
SriLanka Sw25,41 Meter
Saturday 5.30P.M
Tamilan TV
Monday 6.00 A.M
Saturday 6.15 P.M

# பேதுரு - Peter



- 12 அப்போஸ்தலர்களில் ஒருவன் - மத்.10:2
- இவனுடைய இயற்பெயர் சீமோன்
- யோனாவின் குமாரன் என்று அழைக்கப்பட்டான் - யோவா.1:42
- இயேசுவினால் முதலாவது தெரிந்துகொள்ளப்பட்டவன், கர்த்தருடைய சபையில் முதல் பிரசங்கியார்.
- பெத்சாயிதா பட்டணத்தான் - யோவா.1:44
- இவன் ஒரு மீனவன் - மாற்.1:16
- பலமுறை இயேசுவின் நிமித்தம் சிறையிலடைக்கப்பட்டவன் - அப்.12:5

## பெற்றோரே உங்களுக்கு...



1. நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான் - நீதி.13:22
2. பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான் - நீதி.13:24
3. மூடபுத்திரனைப் பெறுகிறவன் தனக்குச் சஞ்சலமுண்டாக அவனைப் பெறுகிறான் - நீதி.17:21
4. நம்பிக்கையிருக்குமட்டும் உன் மகனைச் சிட்சைசெய் - நீதி.19:18
5. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து - நீதி.22:6
6. பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும் - நீதி.22:15
7. பிள்ளையானலும், அதின் செய்கை செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும் - நீதி.20:11
8. பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின்கனி அவரால் கிடைக்கும் பலன் - சங்.127:4
9. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக - எபே.6:4
10. பிள்ளையை தண்டியாமல் விடாதே - நீதி.23:13
11. உன் மகனைச் சிட்சைசெய் அவன் உனக்கு ஆறுதல் செய்வான் - நீதி.29:17
12. தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான் - நீதி.29:15

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 140

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல் எல்லாவற்றிலும் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?
2. மூன்று வருஷம்மட்டும் தாவீதும் சாலொமோனும் நடந்த வழியில் நடந்தவன் யார்?
3. நான் உம்முடைய சம்மதியில்லாமல் ஒன்றும் செய்ய எனக்கு மனதில்லை என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
4. எந்த ராஜா வேதப் பிரமாணங்களை அறியாதவர்களுக்கு அவைகளை உபதேசிக்கக்கடவாய் என்று எழுதினான்?
5. தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு காத்திருந்தவன் யார்?
6. எந்த ராஜாவின் நாட்களில் பாடகர்களுக்கு அன்றாடகப்படி கொடுக்கப்படும்படியாக கட்டளையிடப்பட்டிருந்தது?
7. ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் எப்படிப்பட்டவனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்?
8. எந்த ராஜாவின் நாட்களிலே யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று?
9. அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு உங்களை என்ன செய்கிறார்கள்?
10. என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது என்ற தாசன்யார்?



1. காயீனுடைய வழியில் நடக்கிறவர்களுக்கு... - யூதா11
2. நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டுவிட்டவர்களுக்கு... - லூக்.11:42
3. முதன்மையான ஆசனங்களை விரும்புகிறவர்களுக்கு... - லூக்.11:42
4. சுமக்க அரிதான சுமைகளை மனுஷர்மேல் சுமத்துகிறவர்களுக்கு... லூக்.11:46
5. இஸ்ரவேலின் பரிசுத்தருடைய ஆலோசனையை நாம் அறியும்படி அது சமீபித்து வரட்டுமென்றும் சொல்லுகிறவர்களுக்கு... - ஏசா.5:19
6. சகப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு... - ஏசா.5:20
7. தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு... - ஏசா.5:21
8. நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் பரட்டுகிறவர்களுக்கு... - ஏசா.5:23
9. தேவனைவிட்டு அலைந்து திரிகிறவர்களுக்கு... - ஓசி.7:13
10. தேவன் எவர்களை விட்டுப்போகிறாறோ அவர்களுக்கு... - ஓசி.9:12
11. மனந்திரும்பாத பட்டணங்களுக்கு... - மத்.11:21
12. வானபரியந்தம் உயர்த்தப்பட்ட பட்டணங்களுக்கு... - மத்.11:23

யாருக்கு ஐயோ!

சிறுவர் பகுதி

# அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்

**வேத பகுதி: யோவான் 3:30–33**



அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று சொன்னது யார் தெரியுமா? சொல்லுங்க பார்க்கலாம். மோசே. இல்லை. அது புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தில் உள்ள ஒரு நபர். ஆ..... எனக்கு தெரியும். எங்கே சொல்லு பார்க்கலாம், யோவான்ஸ்நானகன். மிகவும் சரியாய் சொன்னாய். அவன்தான் இப்படி இயேசுவைக் குறித்து சொன்னான். இன்றைக்கு அநேகர் நாம டெவலப் ஆனா போதும் என்று சொல்லுவாங்க இல்லையா, ஆனா யோவான்ஸ்நானகன் அப்படியல்ல! நான் அவருடைய பாதரட்சையின் வாரைக்கூட அவிழ்க்கிறதற்கு பாத்திரனல்ல என்று தாழ்த்தி அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்றான்.

ஏனென்றால் பூமியிலிருந்து உண்டானவன் பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான். இயேசுவோ பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார். அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான். நீங்கள் அவருடைய வசனங்களை புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தில் உள்ள நான்கு சுவிசேஷங்களிலும் வாசிக்கலாம். வாசித்து அவரை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு உங்களுடைய மனதில் முத்திரை போட்டு நிச்சயப்படுத்திக் கொள்வீர்களா? ஓ அப்படியே செய்வோம். மிக நல்ல பிள்ளைகள். உங்களைத்தான் அவர் ரொம்பவும் நேசிக்கிறார்.

நாமும் யோவான்ஸ்நானகன் சொல்வதைப்போல சொல்வோமா? ஓ சொல்வோமே. அவர் பெருகவும் நாம் சிறுகவும் வேண்டும். சரி, தம்பி தங்கைகளா, மீண்டும் அடுத்த மாதம் சிறுவர் பகுதியில் உங்களை சந்திக்கிறேன். ஒவ்வொரு மாதமும் சொல்லுகிற மனப்பாட வசனத்தை படிக்க மறந்திடாதீங்க!

மனப்பாட வசனம்:

“குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்” (யோவான்3:36)




திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 12 ஏப்ரல் - 2012 கனி - 5

ஆசிரியருரை

# இயேசு சிலுவையில் ஆறு மணிநேரம்

## Jesus Is On The Cross For Six Hours

நாம் ஒரு மணிநேரம், ஒரு வேலையைச் செய்ய படாதபாடுபடுகிறோம். ஆனால், ஆண்டவர் இயேசு ஆறு மணிநேரம் பாடுகளை அநுபவித்தார். யாருக்காக? உங்களுக்காகவும் எனக்காகவும், அவர் சிலுவையில் தொங்கினார். ஒரு மணிநேரம் பள்ளிமாணவர்களை நிற்கச்சொன்னால் சிலர் மயங்கி கீழே விழுந்துவிடுவார்கள். ஆண்டவர் இயேசு ஆறு மணிநேரம் சிலுவையில் இரத்தத்தை சிந்திக்கொண்டிருந்தார். அவர் எத்தனை பாடுபட்டிருப்பார் என்று நீங்கள் என்றாவது சிந்தித்துப்பார்த்ததுண்டா? கர்த்தருடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படி கூடிவரும்போது இதை நினைவு கூருகிறார்கள். அப்பொழுது அவர் எதற்காக சிலுவையில் இரத்தம் சிந்தினார் என்பதைக்குறித்து சற்று விளக்கமாக போதகர் போதிப்பார். கர்த்தருடைய மரணத்தை வாரத்தின் முதல் நாளில் அவர்கள் நினைவு கூருகிறபடியால் அவர்கள் அதை அறிந்துகொள்கிறார்கள். அன்பு வாசகரே, அவர் உங்களுக்காகவும் பாடுபட்டார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.



**அவர் மூன்றாம் மணிவேளையில் சிலுவையில் அறையப்பட்டார் என மாற்கு 15:25-ம் வசனத்தில் படிக்கிறோம்.** அவரை சிலுவையில் அறைந்து யூதருடைய ராஜா என்று எழுதி சிலுவையின் மேல் அந்த வாசகத்தை கட்டிவைத்தார்கள். அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று; உலகமோ அவரை அறியவில்லை” என்று யோவான் 1:10-ல் சொல்லப்பட்டபடி அவர்கள் அந்த உன்னதமான கர்த்தர், உலகத்தை இரட்சிக்க வந்தவர் என்பதை அறியாது சிலுவையில் அவரை ஆணியால் அடித்தார்கள். அவரை பரியாசம் பண்ணும்படியாக யூதருடைய ராஜா என்று எழுதிவைத்தார்கள்.

உண்மை என்னவென்றால் அவர் யூதர்களுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே ராஜாதி ராஜா என்பதை அறியாத அந்த மக்கள் அவரை இப்படியாக பரியாசம் செய்தனர். அவர் கிராமங்களில் ஊழியம் செய்து வந்தபோது கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். அக்கிரமக்காரரோ, மூன்றாம் மணிவேளையில் இயேசுவை சிலுவையில் அறைந்து பரியாசம்பண்ணினார்கள். மேலும், “அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள்” (மாற்.15:27). இவரும் ஒரு கள்ளன் என்று சொல்லி கள்ளர்கள் மத்தியில் அவரை அறைந்தார்கள். அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக இப்படி செய்தார்கள். ஆண்டவர் சிலுவையில் மரிப்பதும், அக்கிரமக்காரர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவதும், தீர்க்கதரிசன ஆகமங்களில் சொல்லப்பட்டபடியே நடந்தது. ஆகையால் தான் வேதாகமம் சத்திய புத்தகம் என்றும் பரிசுத்தமான புத்தகம் என்றும் ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்கின்றனர். பிரியமானவர்களே, உலகத்திலே அநேக வேதங்கள் இருக்கிறது. இவ்விதமான ஒரு சம்பவத்தை உண்மை நிகழ்வுகளை, நீங்கள் வேறு எந்த வேதத்திலும் காணமுடியாது. ஆகையினாலே இது பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படுகிறது.

ஆண்டவர் சிலுவையில் தொங்கிய போது “அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி; ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்றுநாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணி; மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை. நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்திறங்கட்டும் என்று சொல்லிக்கொண்டார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள். இவ்வளவு பரியாசத்தையும் தாங்கிக்கொண்டு சிலுவையில் மூன்றாம் மணிவேளையில் தொங்கிக் கொண்டிருந்த ஆண்டவர் ,அவர்களுடைய பரியாசத்தைப் பார்த்து அவர்களை பூமி விழுங்கிப்போடும்படி செய்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச்செய்யவில்லை. ஏனென்றால் பிதாவின் சித்தத்திற்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தார். வேத வாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக தம்மை அர்ப்பணித்தார். நாம் சிலவேளைகளில் கோபப்பட்டு விடுகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் சிலுவையில் ஆறு மணிநேரம் தொங்கிய ஆண்டவர் இயேசுவை



உங்களுக்குத் தெரியுமா?
யாரோ ஒருவர் உங்களுக்காக மாத சந்தா செலுத்துகிறார். அதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

நீங்கள் வருடந்தோறும் தவறாமல் சந்தா செலுத்துபவரா?
உங்களுடைய பிரயாசத்தின் பலனை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம்!




ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய பதிவு என் Ref.No- யை எழுதவும்.


**நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண்ணுடன் தெரியப்படுத்தவும்.**

<u>வாசகரின் கடிதம்</u>

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். 'The Word of Christ' மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு மேலாக படித்து வருகிறேன். நான் அதற்காக ஆண்டு சந்தா செலுத்தாதிருந்தும் தாங்கள் தொடர்ந்து எனக்கு இதழினை அனுப்பிவருவதற்காக நன்றி கூறுகிறேன். அண்மைக்காலத்தில இதழ் புதுப்பொலிவுடன் (appearence) பயனுள்ள ஆவிக்குரிய கட்டுரைகளை தாங்கி வெளிவருவதற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன். பிப்ரவரி 2012 ஆசிரியர் உரை 'பாவங்களை மறைக்கிறவன்' என்ற கட்டுரை என் பாவங்களை ஆண்டவரிடம் அறிக்கையிட அவரோடு ஒப்புரவாக தூண்டு கோலாக இருந்தது. மேலும் அதே இதழில் 'ஊழியனே உனக்கு' என்ற 12 அறிவுரைகளும் மற்றும் 'நான் கர்த்தருடைய சபையைச் சார்ந்தவன்' என்று தலைப்பிட்டு 12 மதிப்பீடுகளை குறித்து கூறியிருந்தது பயனுள்ளதாக இருந்தது. உங்களுக்கு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு அன்புள்ள, சகோதரன் மகேந்திரன், பெங்களூரு.

## <u>பொது அறிவு சோதனை</u>



1. ஆரிய சமாஜம் நிறுவப்பட்டது எந்த ஆண்டு?
அ) 1875 ஆ) 1876 இ) 1877
2. கௌதம புத்தர் பிறந்தது எந்த இடம்?
அ) லும்பினி ஆ) கலிவஸ்து இ) கயா
3. அக்பரால் உருவாக்கப்பட்ட புதிய மதம் எது?
அ) சீக்கிய மதம் ஆ) தீன்இலாஹி மதம் இ) இஸ்லாமிய மதம்
4. வாஸ்கோட காமா இந்தியாவில் வந்து இறங்கியது எந்த நகரம்?
அ) எர்ணாகுளம் ஆ) கோழிக்கோடு இ) திருவனந்தபுரம்
5. இந்தியாவின் மீது முதன்முதலில் படையெடுத்த முஸ்லிம் யார்?
அ) முகமதுகோரி ஆ) முகமதுகஜினி இ) முகமது பின் காசிம்

விடைகள்: 1.அ 2.அ 3.ஆ 4.ஆ 5.இ



## யார் அவர்களுக்குச் சொல்லுவார்?
## Who Will Tell Them?

*Jack W.Carter*

பல வருடங்களுக்கு முன் நான் என்னுடைய அனுதின வேதவாசிப்பில் ஈடுபட்டிருக்கையில், நான் ஒரு தொடர்ச்சியான நிலை விடுபட்டிருப் பதைக் கவனித்தேன், அதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

நான் மோசேக்கும் அதன்பின் யோசுவாவுக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய போதனைகள் பற்றி வாசித்துக் கொண்டிருந்தேன். தேவன் அவர்களுக்கென்று நிறைவேற்றியிருந்த அனைத்தும், அவர்கள் தங்களுடைய மனதிலும் தங்களுடைய இருதயங்களிலும் தம்முடைய வார்த்தைகளை காத்துக்கொள்ளும்படி தேவன் அவர்களை அழைத்தார். அத்தோடு வரப்போகின்ற தம்முடைய ஜனத்தின் சந்ததியாருக்கென தம்முடைய ஜனம் மறந்து போகாமல் அநுசரிக்கும்படியான சில கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி அவர்களை அழைத்தார்.

எளிய கூற்றில் கூறுவோமானால், மொத்தத்தில் அவருடைய போதனைகள் "உங்களுடைய பிள்ளைகளிடத்தில் என்னைப் பற்றி பேசு, ஒவ்வொரு நாளும் நான் அவர்களுடைய தேவன் என்றும் நான் அவர்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து காக்கிறவர் என்றும் அவர்களுக்குக் கற்றுக்கொடு" என அறிவுறுத்துகிறதாயிருக்கிறது. "எனக்கும் என்னுடைய கற்பனைகளுக்கும் கனத்தைச் செலுத்தும்படி அவர்களுக்குச் சொல்லு. "ஒவ்வொருநாளும் அவர்களுக்கு இதைப் பற்றிச் சொல்லு". "நீங்கள் எழுந்திருக்கும் போதும், தூங்கும்படி படுக்கைக்குச் செல்லும் போதும், வழியில் அவர்களோடு நடந்து செல்லும் போதும் இதைப்பற்றி அவர்களுக்குச் சொல்லு" வேறு வார்த்தையில் கூறினால், "என்னைப் பற்றி அவர்களுக்குச் சொல்லும் ஒரு வாய்ப்பினையும் இழந்து விடாதே"என்பதாகும்.

வருங்கால சந்ததியினர் உறுதியாக நிலைத்திருந்து தேவனோடு நெருங்கி இருக்கும்படிக்கு தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு திட்டத்தைக் கொடுத்திருந்தார். பரிதாபம், அதற்கடுத்த சந்ததியினர் தேவனைப் பற்றி அறிவிக்கப்படாததாயிருந்து தேவனுக்கு ஏற்காதபடி மாத்திரமல்ல எந்த ஒரு சாதாரண நிலையிலும் இழிவான துன்மார்க்கமான வாழ்வு வாழ ஆரம்பித்தனர்.

ஜனங்கள் ஏன் இதைச் செய்கின்றனர்? தேவனையும் நமக்கென்று அவர் கொடுத்த போதனைகளையும் அறியாதவர்களாக வளர நம்முடைய பிள்ளைகளை நாம் ஏன் விட்டு விடுகிறோம்? தேவனைப் பற்றி கற்பிக்கப்படாத பிள்ளைகள் தேவனுக்கு தங்களுடைய முதுகைக் காண்பிப்பார்களென்பதை பல உதாரணங்கள் மூலம் நாம் நன்றாய் அறிந்துள்ள போதும் நாம் ஏன் இவ்வாறாகச் செய்கிறோம்?

பிரியமான பெற்றோர்களே, தேவனோடு உறவுவைத்துக் கொள்ளும்படி உங்களுடைய பிள்ளைகளை உருவாக்குவது மூப்பர்கள், பிரசங்கிமார்கள் அல்லது வேதபாட வகுப்பு ஆசிரியர் போன்றவரின் பொறுப்பல்ல..... இது உங்களுடைய பொறுப்பு. ஒரு நாள் கூட தேவனைப் பற்றி உங்களுடைய பிள்ளைகளுக்குப் போதிக்காமலிருந்துவிடாதீர்கள்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு போதிக்காவிட்டால், அவர்கள் ஒருவருக்கும் செவிசாய்க்கமாட்டார்கள் என்பது அதிக நிச்சயம். நீங்கள் உங்களுடைய அக்கறையற்ற நிலையினை தேவனிடத்தில் மெய்ப்பிப்பீர்களானால், அவர்கள் அதே போல் மிக அதிகமாகவே அதே காரியத்தைச் செய்வார்கள்.



நினைத்துப்பார்க்கவேண்டும். நம்முடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது. ஆண்டவரைப்போல தேவனுடைய சித்தம்செய்ய நம்மை அர்ப்பணிக்கவேண்டும். "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்" என எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார் (எபி.2:15). மரணத்தினின்று மனிதனை மீட்க ஒரே வழி தன்னை தியாக பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுப்பதே என்பதை அறிந்த ஆண்டவர். மரணபயத்தினாலே மரணத்திற்கு அடிமைப்பட்டு கிடந்த அனைவரையும் மீட்கும்படியாக, அதாவது விடுதலை பண்ணும்படியாக மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனை தம்முடைய மரணத்தினாலே ஜெயித்தார். அவர் ஒப்புக்கொடுக்காவிட்டால் உங்களுக்கும் எனக்கும் பாவத்திலிருந்து மீட்பு இல்லை. நாமெல்லாரும் பாவிகளாகவும் பாவத்திற்கு அடிமைகளாகவும் இருந்திருப்போம்.

"ஆறாம்மணி நேர முதல் ஒன்பதாம் மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று" என்று மாற்.15:33-ல் படிக்கிறோம். ஆதியிலே தேவன் "வெளிச்சம் நல்லது என்று கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்" இரவு பகலை அவர் உண்டாக்கினார். அவர் சொல்ல இரவு பகல் உண்டாயிற்று. ஆனால் ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணிநேரம்வரை பூமி இருளானது அந்தகாரம் பற்றிக்கொண்டது. யோவான் சொல்லும்போது; "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை" என காண்கிறோம் (யோவா.1:4,5). கடைசிவேளையில் இயேசுவை பிதாவாகிய தேவன் முழுமையுமாக ஒப்புக்கொடுத்தார். எதற்காக; "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கச் செய்யும்படியாக" அவரை ஒப்புக்கொடுத்தார். ஆகையால் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று என்று அறிகிறோம். "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்ற ஆதி.3:15-ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக இயேசு பிசாசை சிலுவையில் நசுக்கும்படியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார்.

"ஒன்பதாம் மணிநேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்" (மாற்.15:34). இந்த வார்த்தையை கேட்ட ஜனங்கள் தேவன் இவரை கைவிட்டுவிட்டார் என நினைத்திருப்பார்கள். ஆனால் உண்மை என்னவென்றால்; மரணத்துக்கு அதிகாரியான பிசாசை ஜெயிக்கும்படியாக பிதாவாகிய தேவன் இயேசுவை

சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது பல்வேறு சம்பவங்கள் நடந்தது. குறிப்பாக ''தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது''. பொதுவாக திரைச்சீலை கிழிந்தால் கீழிருந்து மேல்வரை கீழிந்துபோகும். ஆனால் இது வித்தியாசமாக மேல்தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது. இது இரண்டு உடன்படிக்கைகளை அடையாளம் காட்டுகிறது. இயேசு புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும், புதிதும் ஜீவனுமான மார்க்கத்தையும் நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார். அவர் சிலுவையில் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார். அதாவது தம்மை அனுப்பின பிதாவின் வேலைகளை அவருடைய சித்தத்தின்படி பூமியில் நிறைவு செய்து தம்முடைய ஆவியை ஒப்புவித்தார் என காண்கிறோம். பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன். இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார் இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் என்றெல்லாம் படிக்கிறோம். இயேசு மகா சத்தமாய் கூப்பிட்டு ஜீவனை விட்டதையும், அங்கே நடந்த பல சம்பவங்களையும் பார்த்த நூற்றுக்கு அதிபதி மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான். அவன் ஆச்சரியப்படும் அளவிற்கு மாபெரும் சம்பவங்கள் நடந்தது.

அன்பு நேயரே, நீ ஆண்டவர் இயேசுவைப் பற்றியும் அவருடைய சிலுவை மரணத்தைப் பற்றியும் என்ன நினைக்கிறாய்? அவர் உனக்காக சிலுவையில் ஆறுமணிநேரம் பாடுபட்டார். உன்னுடைய பாவங்களை போக்கும்படியாக, மரணபிடியிலிருந்து உன்னை விடுவிக்கும்படியாக பாடுபட்டார். உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் ஆறு நாட்களில் உண்டாக்கிய ஆண்டவர் இயேசுவுக்கு அந்த யூத ஜனங்கள் கொடுத்த தண்டனையை பார்த்தீர்களா? அவருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும் ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது. ''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை'' என்று யோவான் குறிப்பிடுகிறார் (யோவா.1:3). அந்த உன்னதமான ஆண்டவருக்கு உன்னை ஒப்புக்கொடு.

**கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றால் என்ன?**

சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று கேள்விப்பட்டிருக்கிறோம். பவுல் சொல்கிறார்; ''நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்'' (1கொ.15:3-5). இதுவே சுவிசேஷம். இந்த சுவிசேஷம் அடங்கிய



நினைத்தாளோ என்னமோ, லோத்தின் மனைவி உலகத்தைத் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். அன்பு சகோதரிகளே, சற்று சிந்தியுங்கள். நீங்கள் எவைகளைக் குறித்து அகந்தை கொண்டுள்ளீர்களோ, அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. நீங்கள் எதன் மீது இச்சை கொண்டு ஐசுவரியவானாக விரும்புகிறீர்களோ அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. தேமா என்பவன் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து ஆவிக்குரிய நண்பன் பவுலை விட்டு பிரிந்து போனான். இன்றும் அநேகர் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து அருமையான கர்த்தருக்குப் பிரியமான சகோதர சகோதரிகளின் ஐக்கியத்தை விட்டு பிரிந்து செல்கின்றனர். கிறிஸ்துவுக்குள் மிகப்பிரியமான சகோதரியே, நீயும் இவ்வாறு இருப்பாயானால் சந்தேகமேயில்லை நீ அழிவை நோக்கிச் செல்கிறாய்!

இயேசு, ''வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது'' என்றார். ஆம், அழிந்து போகிற இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாதிருங்கள். உங்களுடைய நடை, உங்களுடைய உடை, உங்களுடைய நடக்கைகள் எல்லாம் 1தீமோ.2:9-10-ல் கூறப்பட்டுள்ளபடி ''........தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்'' என்பதற்கேற்ப அமைவதாக!

அழிவை நோக்கி செல்வதும், ஜீவனை நோக்கிச் செல்வதும் உங்கள் சாய்ஸ். இதோ மரண வழியையும் ஜீவ வழியையும் கர்த்தர் உங்கள் முன் வைக்கிறார். இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் (அழிவுக்கு) போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது......ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது.....'' வானமும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது. இன்னும் காலம் கடத்தாதீர். இன்றே இரட்சண்ய நாள், அழிவை நோக்கிச் செல்லும் அன்பு சகோதரியே, சற்றே உன் பாதையை மாற்றி ஜீவனுக்குள் பிரவேசிக்க முற்படு. என்றென்றும் ஒழிந்து போகாத வேத வசனத்தைக் கேட்டு, விசுவாசித்து, இயேசுவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொள் அப்பொழுது இரட்சிக்கப்படுவாய். நித்திய ஜீவனை அடையும் சிலாக்கியத்தையும் பெறுவாய். கர்த்தர் தாமே உன்னை தம்மிடமாய் இழுத்துக் கொள்வாராக!

**நடப்புச் செய்திகள்**

- **வட மாநிலங்களில் இருந்து இயக்கப்படும் ரயில்களை தென் மாவட்டங்களுக்கும் நீட்டிக்க எம்.பி.,க்கள் கோரிக்கை.**
- **தமிழகத்தில் 51 ஊராட்சிகளுக்கு நிர்மல் கிராம புரஸ்கர் விருது வழங்கப்பட்டுள்ளது.**
- **ஜெர்மனி பெர்லின் பார்லிமென்ட்டில் நடந்த தேர்தலில் அந்நாட்டின் புதிய அதிபராக கோவோச்சிம் சவுக் (72) தேர்வு செய்யப்பட்டார்.**

கிறிஸ்துவுக்குள்ளிருப்பீர்களென்றால், "...... ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3). பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்(1பேது5:5).

மேற்கூறியவை இருக்கப்பட்டவர்களின் மன நிலை: ஆனால் இல்லாதவர் மனநிலையோ அதிலும் மேலானதாயுள்ளது. ஆம், நவநாகரீக உலகம் ஏழ்மையில் இருப்பவர்களையும் நிம்மதியாக இருக்கவிடுவதில்லை. இப்பேர்பட்டவர்கள் தங்களின் இயலாமையை மறந்து, உள்ளவைகள் போதுமென்றிருக்கக் கடவோம் என்ற சத்தியத்தின் சத்தத்திற்குச் செவிமடுக்காமல் ஐசுவரியவான்களாக விரும்புகிறார்கள். இவர்களைப் பார்த்து வேதம், "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்"(1தீமோ.6:7) என்கிறது. மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகெட்ட பலவித இச்சைகளிலும் விழச்செய்கிறது. காரணம் ஐசுவரியவானாக வேண்டும் என்ற விருப்பம். நேற்றுவரை என்னோடே படித்தவள், வேலை பார்த்தவள், இன்றோ அடேங்கப்பா எப்பேர்பட்ட செல்வாக்கு, கார், பங்களோ, என அடிக்கிக் கொண்டே போய் மற்றவர்களைப் பார்த்து அழிவை அறுவடை செய்கிறவர்கள் இவர்கள். அன்பு சகோதரியே உலகத்தைப் பாராதே. அது உன்னை உருக்குலையப்பண்ணும். இன்று காண்கின்ற இந்த உலகம் அக்கினிக்கு இரையாகும். அழிந்து போகப்போகிற இவ்வுலகம் உன்னையும் அழித்துவிடும். "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்"(1தீமோ.6:8). "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்....."(1யோவா.2:15) ஏனெனில் "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்"(யோவா.2:17). ஆம், நாம் காண்கின்ற அனைத்தும் அழிவை நோக்கிச் செல்கிறது. நாம் அதன்பின்னே செல்லலாமா?

சில தினங்களுக்கு முன் செய்தித்தாளின் இலவச இணைப்பில் 'மிரட்டும் தண்ணீர் பஞ்சம்' என்ற தலைப்பின் கீழ் ஓர் செய்தியினை வாசித்தேன். இயற்கையெல்லாம் இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை மறந்து அனுதினமும் மனிதன் இயற்கையோடு கடுமையாக போராடி புது புது செய்தியினை வெளியிட்டுக் கொண்டேயிருக்கிறான். "விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின் அடிப்படையில் இனிவரும் நாட்களில் தண்ணீருக்கு கடும் பஞ்சம் ஏற்படும் என்கின்றனர். இமயலைப்பகுதியில் பனி உருகுவது அதிகமாகிறது. தற்போது ஆண்டுக்கு 10 முதல் 15 மீட்டர் உயரத்துக்குப் பனி உருகுகிறது. அந்த அளவுக்கு பனியின் அளவு அதிகரிப்பதில்லை. இது நீடித்தால் இமயமலை முழுவதுமாக பனி இல்லாத வறண்ட மலையாக மாறிவிடும். தற்போது இமயமலையிலிருந்து உருவாகி ஓடிவரும் நதிகளும் வறண்டு விடும். அதே போல் தென்துருவத்தில் மனிதர் வாழ முடியாத அண்டார்டிகா கண்டத்திலும் பனிமலையின் அளவு குறைந்து சுமார் 3,250 ச.கி.மீ. அளவும் 200 மீட்டர் அளவு ஆழமும் கொண்ட பனி பாறைகள் உடைந்து கடலில் கலந்துள்ளது இதனால் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வெப்ப நிலை மாறுபட்டு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது என எச்சரித்துள்ளனர். காரணம் ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டைதான் என்கின்றனர்". இதையெல்லாம் அறியும் போது சோதோம் கொமோரா பட்டணங்களைப் பற்றிய நினைவுதான் வருகிறது. ஐயோ! அழியப் போகிறது நம்முடைய ஆஸ்திகள் என



புத்தகங்கள் நான்கு அவை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான். இந்த புத்தகத்தில் அவருடைய நடபடிகளைக்குறித்தும், அவருடைய அற்புதங்களை குறித்தும் அதிகமாகப்படிக்கிறோம். குறிப்பாக அவர் தாம் சம்பாதித்த சபையைக் குறித்துப்படிக்கிறோம். அவரை பின்பற்றும்போது ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்களைப் பற்றியும்படிக்கிறோம். இயேசுவின் உபதேசத்தை கேட்டு, பரிசுத்த ஆவியானவருடைய உதவியோடு மேலும் 25 புத்தகங்களை அவருடைய சீஷர்கள் எழுதியிருக்கிறார்கள். அவைகள் சபையின் வளர்ச்சிக்கும், ஆத்தும வளர்ச்சிக்கும், கர்த்தருடைய உபதேசங்களை நாம் அறிந்துகொண்டு அவைகளின்படி ஜீவிப்பதற்கும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது. இந்த சத்திய வசனங்கள் நம்மை சத்தியத்திற்கு நேராக வழிநடத்துகிறது. ஆகவே வேதாகம சத்தியங்களை நோக்கிப் பார்த்து சத்தியபரரை அறிந்து கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று உங்களுடைய பாவங்கள்போக கழுவப்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**வேத அறிவுப்போட்டி எண் 139-ன் விடைகள்**

| | |
|---|---|
| 1.கிறிஸ்து | - கொலோ.3:4 |
| 2. போவாஸ், ரூத் | - ரூத் 2:12 |
| 3. தெசலோனிக்கேயர் | - 1தெச.3:3 |
| 4. சுரமண்டலத்தை | - 1சாமு.16:23 |
| 5. பவுல் | - 2தெச.3:5 |
| 6. தாவீது | - 2சாமு.22:48 |
| 7. ஆம் | - 1தீமோ.6:7 |
| 8. யெரொபெயாம் | - 1இரா.13:4 |
| 9. பவுல், தீமோத்தேயுவுக்கு | - 2தீமோ.2:2 |
| 10. 20 | - 2இரா.4:42 |

"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை" - சங்.119:165

**வேத அறிவுப்போட்டி எண் 139-ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1.M.சாலொமோன் தேவ கிருபை | - கொடைக்கானல் |
| 2.A.ரெபேக்காள் | - மதுரை |
| 3.Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| 4.N.ஜான் செல்லையா | - மதுரை |
| 5.Mrs.ரூபி பிரகாஷ் | - தாராபுரம் |
| 6.K.அசோக்மேதா | - மதுரை |
| 7.Mrs.பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 8.G.பூங்கோதை | - வெ.பாளையம் |
| 9.Miss.ஷீலா | - ஜோலார்பெட் |
| 10.J.நிர்மலா ஜான் | - மதுரை |
| 11.N.கமலவேணி | - சென்னை |
| 12.M.சத்தியா | - திண்டுக்கல் |
| 13.Sis.கலாவதிராஜா | - திண்டுக்கல் |
| 14.V.F.ஷர்லோ | - பாண்டி |
| 15.M.ராணி | - செட்டிபாளையம் |
| 16.V.மெர்ஷி | - செட்டிபாளையம் |
| 17.A.அரசிலங்குமாரி | - செட்டிபாளையம் |
| 18.B.விஜிபிரியங்கா | - செட்டிபாளையம் |
| 19.Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |

## ஜெபியுங்கள்

- சென்னை தாமஸ்மவுன்ட் சபையார் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- மே மாதம் நமது சகோதரர்கள் பல இடங்களில் நடத்தும் விடுமுறைகூட்டங்களுக்காக...
- சென்ற மாதம் வெளிவந்த Vol.2 புத்தகத்திற்காக...
- ஏப்ரல் மாத ஊழியங்களுக்காக...
- மாவட்ட ஊழியர்களுக்காக...



# பரலோகம் எப்படியிருக்கும்?

## What Will Heaven Be Like?

**J.C.Choate**



நாம் எல்லாரும் மாளுவோம் என வேதாகமம் கூறுகிறது அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நமது மரிக்கத்தக்க சரீரத்தை களைந்திடுவோம் 1தெசலோ.4:16,17 "அன்றியும் ஒருதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறதென்று (எபி.9:27) நமக்கு கூறப்பட்டுள்ளது. மேலும் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் என அப்போஸ்தலனாகிய பவுலடியார் அறிவித்துள்ளார் (2கொரி.5:10).

ஒருவேளை இந்நிலையில் ஒரு மிகமுக்கியமான கேள்வி என்னவெனில் "ஒருவனுடைய மரணத்திற்கும் பெறும் நியாயத்தீர்ப்புக்குமிடையே என்ன நடைபெறுகிறது?" வேறு வகையில், அக்காலத்தில் அவன் எங்கே வசிக்கிறான்? அவன் ஜீவன் உள்ளவனாய் இருக்கிறானா? அவன் உணர்வுள்ளவனாக இருக்கிறானா? அல்லது அவன் தொடர்ந்து கல்லறையில் இருக்கிறானா அல்லது ஓர் உணர்விழந்த நிலையில் மரித்தவனாயிருக்கிறானா?

லூக்கா16:19-31-ல் கிறிஸ்துவானவர் ஐசுவரியவான் மற்றும் லாசரு என்பவர்களைக் குறித்து கூறுகையில் அவர்கள் இருவருமே மரித்தார்கள். ஏழை மனிதனின் ஆத்துமா தேவதூதரால் ஆபிரகாமின் மடியிலே கொண்டுபோய் விடப்பட்டது. அல்லது அதாவது மரித்த நீதிமான்களின் இடமாகிய பரதீசிலே இருந்தான். ஐசுவரியவானுடைய ஆத்துமா பாதாளத்திலே வேதனையும் அக்கினியான இடத்திற்கு சென்றது. பின்பு அவன் கண்ணீர்சிந்தி, பிதாவாகிய ஆபிரகாமிடம் அவன் மீது இரக்கம் கொண்டு லாசருவை தன்னிடம் அனுப்பி அவன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து அக்கினி ஜீவாலையில் வேதனையினால் வறண்ட தன் நாவை குளிர்ந்திட வேண்டினான். அப்பொழுது ஆபிரகாம், நீ பூமியிலே உயிரோடிருந்தபோது உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவோ தீமைகளை அனுபவித்தான் என்பதை நினைவுபடுத்தினார். இப்பொழுது லாசரு தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய் என்றார்.

அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்



பெண்கள் பகுதி

# அழிவை நோக்கி...

*-J.GloryArjunan*



அன்பு சகோதரிகளே, இன்றைய உலகம் அழிவை நோக்கிச் செல்கிறது என்பதை எப்போதாவது சிந்தித்ததுண்டா? புறஜாதியான் கூறுகிறான் இது 'கழியுக காலம்' என்று நாமோ இது 'கடைசி காலம்' என்கிறோம். ஆம், உண்மையிலும் உண்மை இது கடைசி காலமே! செய்தித்தாளை புரட்டினால் அங்கே சில அழிவின் சம்பவங்கள், வானொலி செய்திக்குச் செவிமடுத்தோமானால் அங்கே சில நாசச் செய்திகள், தொலைக்காட்சிப் பொட்டியின் செய்தி நேரத்திற்குக் கவனத்தைத் திருப்பினால் அங்கேயும் சில கோரச்சம்பவங்கள். இப்படி மனிதருக்கு விரோதமாக மனிதனின் செயல்பாடுகள், இயற்கைச் சீற்றங்கள், பாவத்தின் விளைவால் வரும் அழிவுகள் என அழிவுகள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வேதாகமும் கடைசிக்காலச் சம்பவங்கள் குறித்து அழகாய் விவரித்துள்ளது. எது எப்படியிருப்பினும், நோவாகாலத்தில் வாழ்ந்து வந்த மனுஷரைப் போலவே இன்றும் மனுஷன் நிர்விசாரமாகவே வாழ்கிறான். அன்பு சகோதரிகளே, நாம் எப்படி? அழிவின் பாதையில் அகந்தையாய் நடக்கிறோமா? அல்லது ஜீவனுக்குப் போகும் பாதையில் பொறுமையாய் நடந்து கொண்டிருக்கிறோமா?

நீதிமொழிகள் 16:18 கூறுகிறது, "அழிவுக்கு முன்னானது அகந்தை". சகோதரிகளாகிய நாம் இங்கு சற்று நின்று நிதானிக்க வேண்டியது அவசியம். நம்மில் ஏதேனும் அகந்தையான எண்ணம் உள்ளதா? நம்முடைய சுகபோக வாழ்வு, நம்முடைய பிள்ளைகளின் பராக்கிரமம், நம்முடைய செல்வம், சமுதாயத்தில் நம்முடைய செழுமை, இன்னும் வேறெதைக் குறித்தாவது நமக்குள் பெருமையான, அகந்தையான எண்ணமுண்டா? நம்முடைய மனமேட்டிமை நம்மை விழச்செய்யும் என வேதம் கூறுகிறது (நீதி.16:18). மேலும் "மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்...." (நீதி.16:5) எனவும் வேதம் கூறுகிறது. இவையெல்லாம் எனக்குள் இல்லை என்கிறீர்களா? நல்லது. அப்படியென்றால் நீங்கள் எப்போதாவது உன் சகோதரியைக் குறித்தோ, அல்லது தோழியைக் குறித்தோ அல்லது உடனிருப்பவரைக் குறித்தோ அற்பமாக எண்ணியிருக்கிறாயா? இன்றைய உலகில் பெருமை தலைவிரித்தாடுவதோடு, மற்றவர்களை அற்பமாக எண்ணி அலட்சியம் செய்து மனமுடையச் செய்வதும் அதிகமாகக் காணப்படுகிறது. உண்மையில் இவர்களெல்லாரும் அழிவை நோக்கிச் செல்பவரே! "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:10 என இயேசு சொல்கிறார். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, உன்னை நீயே நிதானித்து அறிந்து கொள். இப்பேர்பட்ட குணமெல்லாம், அழிவை நோக்கிச் செல்லுகின்ற உலகத்தாரின் குணம். நீங்கள் உண்மையாகவே

சகோதரிகளே சிந்தியுங்கள். நம் அன்றாட வாழ்க்கை ஓட்டம் நெடுநாள் வர நம்மை அழைத்து செல்ல கூடியது. அதற்கு முதலில் நாம் ஜெப வாஞ்சையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இயேசு மத்தேயு6:9-12 இவ்வசனங்களில் சீஷர்களுக்கு ஜெபம் செய்ய வேண்டிய விதம் என்று கற்பிக்கிறார். சீஷர்களின் ஊழிய பாதையில் முதலாவது ஜெப வாழ்க்கை இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் சந்திக்கப்போகும் இன்னல்கள் பேரிடிகளைத் தாங்கிக்கொள்ள எப்போதும் பிதாவின் கிருபை தேவை. அதற்கு தினமும் அவரிடம் பேச வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

அதுபோல தொடர்ச்சியாக ஒரு நாள் முழுவதும் நாம் எதை செய்தாலும் அதை தேவனுக்கு பிரியமானதாக செய்ய முயற்சி செய்ய வேண்டும். சரி சகோதரி எல்லாம் சரியாத்தான் இருக்கு. இங்கு தொடர்ச்சியாக தேவனுக்கு பிரியமா ஒரு நாள் முழுக்க ஓடணும் என்று சொல்றீங்களே, அது என்ன? சகோதரிகளே! கொஞ்சம் நேரம் எடுத்து எனக்காக கொலோசெயர் 3:12-25-யை வாசியுங்கள். இங்கே ஒரு பட்டியல் இடப்பட்டுள்ளது. இந்த வசனங்களை அன்றாடம் செய்ய பழகினோமானால் போதும். உடல்நிலை சரியில்லாதபோது மருத்துவர் கொடுக்கும் மாத்திரைகள் மட்டும் சாப்பிட்டு நம் உடல் நிலையில் பெருத்த மாற்றத்தை கொண்டு வர முடியாது.

சகோதரியே! ஒரு குடும்பத்தில் தலைவியின் பங்கு மிக முக்கியமானது. அதினால் மற்ற பெண்களுக்கு ஒன்றுமில்லை என்று பொருள் அல்ல. அனைவருமே மிக முக்கியமானவர்கள். நாம் ஓட வேண்டும் என நினைக்கும்போது அதில் தேவன் ஆசீர்வாதத்தையும் உடன் வைத்து தான் அழைக்கிறார். பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.

1. எப்போதாகிலும் காலை ஜெபத்தை தவறவிட்டதுண்டா? அநேக நாட்கள் அதைப்பற்றி சிந்தித்ததே கிடையாது.

2. வேத வாசிப்பை, அதையும் கூட...

3. ஒரு நாளில் பிரச்சனைகள் என்று சந்திக்க கூடியவற்றை தேவவசனத்தினால் எதிர்கொண்டதுண்டா? யோசிக்க வேண்டிய விஷயம்.

4. பிள்ளைகள் தேவனுக்கு பிரியமாய் வாழ வேண்டும் என்று தினமும் உணர்த்தியதுண்டா?

5. கணவரின் அன்பை பெற தேவன் கூறும் கொலோ.3:18-ன்படி கீழ்ப்படிந்ததுண்டா? 2தீமோ.4:7-ல் பவுல் சொல்வது போல் ஓட்டத்தை முடிப்பது எளிது அல்ல. போராடித்தான் பெற்றாக வேண்டும். குறுக்கு வழியில் அல்ல. நல்ல போராட்டம் ஆரோக்கியமான போராட்டம் அதை செய்து விசுவாசத்தை காத்துக்கொள்ள வேண்டும். இது அறிவுரை அல்ல, அன்பின் செய்தி என் அன்பு சகோதரிக்கு!

-நன்றி திருமறைநேரம் ஜனவரி 2012 இதழில் வெளிவந்தவை.

**இலங்கை ஆசியசேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை இலங்கை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இலங்கை வானொலி இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**
**எமது www.thewordofchristindia.com என்ற இணையதளத்தில் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" மாத இதழ் மற்றும் வானொலி, தொலைக்காட்சி அனைத்து ஊழியங்களையும் உலகளவில் 24-ங்கு மணிநேரமும் பார்த்து மகிழுங்கள்.**



பிளவு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று ஆபிரகாம் விவரித்து கூறினார்.

ஐசுவரியவான், லாசருவை தனது தகப்பன் வீட்டிற்கு அனுப்பி தனது ஐந்து சகோதரர்கள் வேதனைப்படும் இவ்விடத்திற்கு வராமலிருக்க அவர்களுக்கு எச்சரித்திட வேண்டினான். அதற்கு ஆபிரகாம், அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும், அப்படி மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள். எளிதில் கற்று புரிந்துகொள்ளக்கூடிய உண்மை என்னவெனில் மரித்தோர் தங்களின் இருப்பிடத்தை மாற்றிக்கொள்ளவோ அல்லது மறுபடியும் பூமிக்கு திரும்பி தங்களை ஜீவிப்போரிடையே காண்பித்துக்கொள்ளவோ முடியாது என்றார்.

### எப்போது மரித்தோரின் உயிர்தெழுதல் மற்றும் நியாயத்தீர்ப்பு சம்பவிக்கும்?

"ஆனால், ஒருசிலர் இதனை மறுப்பர்" இயேசுவின் கணக்கிடுதலில், ஐசுவரியவான் ஏற்கனவே வேதனைப்பட்டான். மேலும், லாசரு ஏற்கனவே பரதீசியிலிருந்தான். பொதுவான உயிர்த்தெழுதலின் போதும் நியாயத்தீர்ப்பின்போதும் நம் எல்லாருக்கும் எப்படி இருக்கும் (யோவா.5:28,29)? இதனைக்குறித்து எவ்விதமான சிக்கலும் இங்கில்லை. இவ்வுலக வாழ்வில், கொலையாளி பிடிபட்டால், சிறையில் அடைக்கப்பட்டு, நியாயத்தீர்ப்பு வழங்குமட்டும் காக்கப்பட்டு அவனின் குற்றத்திற்கேற்ப தண்டனையடைகிறான். அவ்விதமே நீதிமான்கள் அல்லது உண்மையுள்ள விசுவாசமுள்ள கிறிஸ்தவன் மரித்ததும் பரதீசுக்குள் இருக்கிறான். அல்லது மரித்த நீதிமான்களிடையேயும், துன்மார்க்கன் மரிக்கும்போது, உடனே அவன் வேதனையுள்ள இடத்திற்கு அல்லது மரித்த துன்மார்க்கனோடும் சேருவான்.

ஆனால் கிறிஸ்துவானவர் மறுபடியும் வரும்போது (1தெசலோ.4:16). எல்லாரும் அவருடைய சத்தத்தை கேட்கும்போது கல்லறையிலிருந்து சரீரங்களில் உயிர்த்தெழுந்து, பரதீசியிலிருந்தோ அல்லது வேதனையான பாதாளத்திலிருந்தோ அழிவுள்ளதானதோ அழியாமையான சரீரத்தில் இணைந்து மறுரூபமாகி தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்காக காத்திருப்பார்கள் (அப்.17:31; மத்.25:31-46) இறுதியாக இயேசுவின் பதிவான வார்த்தை இவ்வாறாக கூறுகிறது. துன்மார்க்கர் அல்லது இரட்சிக்கப்படாதோர் "நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" (மத்.25:46).

### இது உவமையானதா?

ஐசுவரியவான் மற்றும் லாசருவைப்பற்றி குறிப்பிடப்பட்டது ஒரு உவமை என சிலரும், இது வேதாகமத்தில் அவ்வாறு கூறப்பட வில்லை என்றும் கூறுவர். மேலும் எந்த நிலையிலும் உவமையில் யாருடைய பெயரை அடையாளம் காட்டி குறிப்பிடவில்லை. உவமையானாலும் மற்ற பொருட்படுத்தாத எவையும் போதிக்கப்பட்டிருக்கின்ற உண்மையானவற்றை மாற்றாது அதென்னவெனில் அது மாறாத உறுதியானது மரித்தோர் யாரானாலும் அவர்கள் என்ன நடக்கிறது என்று சுயஉணர்வுடன் அறிந்து, தாங்கள் இவ்வுலகில் என்ன செய்தார்களென்றும் இவ்வுலகில் தாங்கள் அறிந்திருக்கிற மக்களையும் அறிவார்கள்.

ஆவி அல்லது ஆத்துமா பரதீசுக்கு அல்லது படுவேதனையான இடத்திற்கு, தாங்கள் இரட்சிக்கப்பட்ட அல்லது இழந்துபோன நிலைக்கு ஏற்றார் போலிருக்கும். நியாயத்தீர்ப்பின் நாளிலே அவர்களைக்குறித்து ஜீவபுத்தகம் திறக்கப்படும் போது தங்களை பாதுகாத்துக் கொள்ளும்படியாய் பேசுவார்கள் (வெளி.20:12; மத்.25:31-46). நிதியுள்ள நியாயாதிபதியினால் அவர்கள் நியாயத்தீர்ப்பு பெற்று ஓர் நித்திய நரகத்திலே பிசாசு மற்றும் அவன் தூதர்களுடனோ அல்லது பரலோகத்திலே ஆண்டவரோடும் மற்றும் இரட்சிக்கப்பட்டவர்களுடனோ கூட என்றென்றும் வாழ்வர்.

மரணமும் நியாயத்தீர்ப்பும் இறுதியானது. ஒருவரின் சென்றடையும் இடமும் நித்தியமானது. இரண்டாம் சந்தர்ப்பம் இல்லை. துன்மார்க்கரோ ஒன்றிலும் சாராதவராய் துன்மார்க்கர் என்றும் இருப்பர். ஆத்துமா என்றென்றைக்கும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ வாழும்.

**வேதாகமம் பரலோகத்தை எவ்வாறு விவரிக்கிறது?**

"அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைதனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தின வராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது" (ரோ.8:20-22).

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள். அந்தநாளில் வானங்கள் வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் **புதிய வானங்களும் புதிய பூமியும்** உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2பேதுரு3:10-13).

**"பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன் முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின, சமுத்திரமும் இல்லாமற்போயிற்று"** (வெளி.21:1).

என் நண்பா, நாம் இன்று நமது ஆண்டவரை சந்திக்கவும், நமது ஆத்துமா புதியதும், பூரணமானதுமான சிருஷ்டிப்பில் வாழ்ந்திட ஆயத்தமாவோமாக. தயவு கூர்ந்து இரட்சிப்பை உதாசினப்படுத்தாதீர். ஆண்டவர்கூறுவதை கேளுங்கள் "என்னை விட்டுபோங்கள் ... நித்திய அக்கினியிலே போங்கள்" என்று சொல்லாதபடி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

-தமிழில் மொழிபெயர்த்தவர் **சகோ. ஜான் எஸ் நாதன். சென்னை**

(Bro.John S.Nathan, Chennai)



பெண்கள் பகுதி

# விசுவாச ஓட்டம்

-Mrs.Sheela Immanuel

**அன்பிற்குரிய சகோதரிகளுக்கு!**



அன்பர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். 1கொரி.9:24 பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை ஓட்டபந்தையத்தையும், கடலில் பயணம் செய்யும் படகிற்கும் ஒப்பிட்டு பேசப்படுகிறது. இது ஏன் இப்படி ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்று அநேக முறை சிந்தித்ததுண்டு. ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவர் தன்னை எல்லா வகையிலும் ஆயத்தப்படுத்திக்கொண்டு ஒரு இலட்சியத்தை மட்டும் நினைவில் கொண்டு ஒரே சிந்தையுடன் தனக்கு நியமிக்கப்பட்ட பாதையில் ஓடுவார். அதேபோல நாமும் எப்படி இந்த கிறிஸ்தவ ஜீவியத்தில் தொடர்ந்து ஓட வேண்டும் என்று கவனிப்போம். சகோதரிகளே அநேகமுறை நாம் கசந்து கொள்வதுண்டு. வீட்டு வேலையை முடித்து விட்டு, காலையில் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு, தானும் வேலைக்கு சென்று திரும்பி, மீண்டும் வீட்டினுள் வேலை என்று சகோதரிகளுக்கு அன்றாடம் தொடர் ஓட்டமே நடைபெற்று வருகிறது. இதற்கு மத்தியில் என்ன சகோதரி கிறிஸ்தவ ஓட்டம், எங்களால் வீட்டுக்குரிய ஒட்டத்தையே சரியாக ஓடமுடியவில்லை, நாம் மாமிச வாழ்க்கை வேறு கிறிஸ்தவ வாழக்கை வேறு என்று எண்ணுவோமானால் இப்படித்தான் சிந்திபோம். கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வு தினமும் வேண்டும் என்பதற்காகவே பவுல் இங்கு 2கொரி.9:24,25-ல் இந்த உதாரணத்தை கொடுக்கிறார். சரி சகோதரி, பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள் என்று சொன்னீர்களே, இது என்ன என்று கேட்பது புரிகிறது. கவனிப்போம், முதலாவது இந்த பந்தயத்தில் ஓடுபவர்கள் முழுமனதை (கவனத்தை) வைக்கவேண்டும். இப்படிப்பட்ட உலக பிரகாரமான ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவர்கள் அதிக நாட்கள் அதற்காக கடுமையான பயிற்சி செய்து தங்கள் சரீரங்களை வருத்திக் கொண்டு எப்படியாயினும் வெற்றி பெற வேண்டும் என்ற சிந்தையுடன் ஓடுவார். அதுபோல ஜீவ கீரிடம் நமக்காக வைக்கப்பட்டுள்ளது. 2தீமோ.4:8 அதைப் பெற நமக்கு முதலில் ஏக சிந்தை அவசியம்.

இரண்டாவதாக, ஓடுகிறவர்கள் எப்படி வேண்டுமானாலும் ஓட முடியாது. அவர்களுக்கென்று சட்டங்கள் உண்டு. 2தீமோ.2;5 அதுபோல நமக்கு கொடுக்கப்பட்டுள்ள சட்டம் யோவான் 15:20-ல் இயேசு சொன்னதுபோல நாம் அவருடைய அன்பிலே (இயேசுவிலே) நிலைத்திருக்க முடியும்.

மூன்றாவது ஓடுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் நம்பிக்கை வெற்றி பெற்ற பின் அவர்களுக்கு பரிசு, அதன் பின் தொடர்ச்சியாக கிடைக்க கூடிய அநேக வெகுமதியான நாட்கள். அவர்கள் வெற்றி பெற்றபின் அடையபோவது முற்றிலும் உலகத்துக்குரியது. ஆனால் தேவன் நமக்கு கொடுக்கும் நம்பிக்கை 2தீமோ.4:8 நித்தியத்திற்குரியது. இது இறுதியாய் நாம் அடையபோவது. ஆனால் நம்மில் அநேகர் ஒவ்வொரு நாளும் ஓட வேண்டிய விசுவாச வாழ்க்கையிலேயே தவறிவிடுகிறோம். இது என்ன அவ்வளவு முக்கியமா? எனக்கு தேவன் கூறின நித்திய ஜீவன் இவையெல்லாம் தெரியும். எப்படியாவது வாழ்ந்து பெற வேண்டியதை பெற்றுவிடுவேன் என்று எண்ணுகின்றனர்.